5

MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF THIRU. S. GOKULRAJ ROUGH STONE & GRAVEL QUARRY, OVER AN EXTENT OF 3.45.0 HA AT SF.NO. 95/1, 95/2, 95/3, 95/4, 95/5, 95/6, 95/7, 95/8, 95/9 & 95/10 AT PALLI VILLAGE, CHEYYAR TALUK, TIRUVANNAMALAI DISTRICT ON 10.02.2026 AT 11.00 AM AT M/s. JAITHRI KALYANA MANDAPAM, NO.192/2A3, CHITHATHUR MAIN ROAD, CHOLAVARAM VILLAGE, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT.

Present:

1	Thiru.R.Rampradeepan	:	District Revenue Officer Tiruvannamalai. (Representative of the District Collector, Tiruvannamalai)
2	Er. A. Jothi Prakash	:	District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.
3	Dr. S. Sugashini	:	Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.
4	Er. K. Prem Kumar	:	Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.
5	Thiru. N. Ashok Kumar	:	Tahsildar, Cheyyar Taluk, Tiruvannamalai District.
6	Thiru.S. Gokul Raj	:	The Proprietor, M/s. S. Gokulraj Rough Stone & Gravel Quarry.
7	Thiru.Balasubramani	:	EIA Consultant, M/s. Global Mining Solutions, Salem.
8	Public	:	106 Nos. (Attendance enclosed as Annexure).

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, welcomed the District Revenue Officer, Tiruvannamalai, the general public who had assembled for the public hearing in connection with obtaining Environmental Clearance for the proposed Rough Stone and Gravel Quarry of Thiru Gokulraj, and Thiru Gokulraj, the proprietor of the said quarry. He

further pointed out that prior notification regarding the conduct of this public hearing had already been published on 08.01.2026 in the Tamil and English daily newspapers, namely “Dinamalar” and “The New Indian Express.” He also informed that public announcements had been made in and around Palli Village through loudspeakers and distribution of pamphlets.

He further stated that, on behalf of the proponent of the proposed Rough Stone and Gravel Quarry project, their project consultant would present a detailed explanation of the project to the public, following which the public may given their views, suggestions, doubts, and seek clarifications regarding the project, and that all such event would be video graphed and audio recorded, and the minutes and records of this meeting would be forwarded to the State Environment Impact Assessment Authority-Tamil Nadu (SEIAA-TN).

The District Revenue Officer, Tiruvannamalai, inaugurated the public hearing meeting and requested Thiru Gokulraj, the proprietor of the proposed Rough Stone and Gravel Quarry, to present the detailed explanation regarding the proposed quarry project.

Thiru. Balasubramani, Environmental Impact Assessment Consultant of M/s. Gokulraj Rough Stone and Gravel Quarry project from M/s. Global Mining Solutions, Salem, welcomed all those who had assembled for the public hearing meeting and delivered a detailed power point presentation explaining the operational aspects of the Rough Stone and Gravel Quarry project and the Environmental Management Plan to be implemented during its operation.

Following the above presentation, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, announced that the public may submit their views either in writing or orally. He further requested that, before recording their views, the public should mention their name and their village name.

Accordingly, the following public expressed their views and suggestions.

7

1. Tmt. Uthirakumari, Palli Village:

Tmt. Uthirakumari stated that the proposed establishment of a stone quarry raises serious concerns. She pointed out that the use of explosives for blasting in quarries may cause ground vibrations, which could result in cracks in residential buildings and thereby pose a threat to the safety of their families and future generations. She questioned clarification on this issue.

In response, the District Revenue Officer, Tiruvannamalai, informed that a detailed explanation of the project had already been provided through a power point presentation. It was further stated that the public may submit their views and objections either in writing or orally, and that all such representations would be duly recorded and forwarded. The public was requested to formally register their views regarding the project.

Subsequently, she stated that the concerns raised are acknowledged. She further conveyed that if adequate safety measures are implemented and all Government Rules & Regulations are strictly adhered to, support would be extended for the operation of the quarry.

2. Thiru. Subburamayya, NGO:

Thiru. Subburamayya stated that quarries are not established in all locations, but only in specific and suitable places. Therefore, everyone should understand that the establishment of this quarry in our Palli Village is a benefit and a matter of fortune for the area. He further stated that there would be no impact on agriculture or water resources in the village. He also mentioned that ten NGOs have jointly submitted a letter in this regard. Hence, he conveyed his support for the proposed quarry.

3. Thiru. Suresh, Volunteer:

Thiru Suresh conveyed his greetings to the District Environmental Engineer, the District Revenue Officer, and the members of the public who participated in the public hearing meeting. He stated that this quarry has created employment

opportunities for both educated and uneducated youth of the local village. He further emphasized that tree saplings should be planted and that proper monitoring must be carried out by the Pollution Control Board to ensure that air pollution does not occur. Therefore, he expressed his support for granting permission to the quarry without any hindrance.

4. Tmt. Thillai Nayagi, Pallimettu Street, Palli Village:

Tmt. Thillai Nayagi stated that it has been informed that a crusher unit is proposed to be established. She mentioned that the crusher units already operating in the area have caused damage to their houses. Although she is elderly, she emphasized that their children must be able to live safely. Therefore, she insisted that proper safety measures must be strictly followed in the operation of the crusher unit.

5. Thiru S. Jagadeesh, Pallimettu Nagar, Palli Village:

Thiru. S. Jegatheesh stated that Thiru. Subburamayya, who spoke earlier, had mentioned that the establishment of the quarry would be a blessing for the village. He questioned how it could be considered a blessing.

He further expressed that although it was stated that detailed explanations about the quarry had been provided through power point presentations, many of the people present at the meeting were not even clearly aware of why they had gathered there. He strongly opposed the establishment of the quarry, particularly since it is proposed to be located in Palli Mettu Nagar.

He pointed out that more than 50 people from Palli Mettu Street were present at the meeting, while the total population of the village is around 900. Therefore, he insisted that the meeting should be conducted within their own village so that all concerned residents would have a proper opportunity to express their views.

He also stated that their village lacks basic amenities, and those essential facilities should first be provided. He emphasized that many things are needed for the welfare of the village. He reiterated that the meeting must be held within the

village itself, noting that while the village has around 1,000 residents, only about 70 people had attended the present meeting. He clarified that he was not speaking for himself, but on behalf of his village.

Further, he requested that the meeting be convened in the village, that the people be gathered properly, and that the required basic facilities be provided. Only after that, he said, would they take a decision. He stated that this demand was being placed on behalf of the general public of the village.

6. Thiru. Madhusudhanan, Palli Village:

Thiru. Madhusudhanan expressed his gratitude for arranging the public hearing meeting in their village. He stated that, generally, in public hearings related to stone quarries, people from other Panchayats tend to participate in larger numbers than those from the concerned Panchayat. However, he noted with satisfaction that, in this meeting, a large number of participants were from their own Panchayat. He further stated that approval has been granted to establish the quarry in Depressed Class land. Since he repeatedly referred to issues concerning Depressed Class land without focusing on the specific project details, the District Revenue Officer, Tiruvannamalai requested him to confine his remarks to matters related to the proposed project.

Continuing his speech, he stated that the primary livelihood of the people residing in the village is goat and cattle rearing. However, he alleged that companies establishing quarries are purchasing lands at high prices. He pointed out that most of the people residing within a 500-meter radius of the proposed quarry site belong to Scheduled Caste communities. He further stated that certain corporate companies are purchasing lands at high prices, obtaining permission for quarrying, and extracting stones in large quantities. He added that already four or five quarries are operating within a 500-meter radius.

He questioned how this would improve the livelihood of the local people and how they would graze their goats and cattle under such circumstances. He stated

that this would ultimately destroy agriculture in the area. Expressing concern over the granting of permission to establish quarries on Depressed Class lands. Also, he conveyed his objection to the establishment of the proposed quarry.

7. Thiru Muniyandi, Pallimettu Street, Palli Village:

Thiru. Muniyandi stated that, as mentioned by earlier speakers, crusher units have already been established in the village, and even if they protest, the situation is such that nothing can be changed. Further, he stated that due to the excessive noise generated from the crushers, we are unable to sleep peacefully at night. Therefore, he insisted that blasting of rocks and crusher operations should be carried out only during the prescribed hours. He further stated that the crushers are being operated even after 6.00 P.M., and hence strict time restrictions should be imposed. He also pointed out that the noise caused by Lorries during night hours is very high. In view of these issues, he expressed that such crusher operations are not required in the village.

8. Thiru Karnan, Pallimettu Street, Palli Village:

Thiru. Karnan stated that all the stone quarries operating in their village are extracting rocks excessively and without proper limits. He remarked that even if they say "we do not want the quarry," it is unlikely to be stopped; therefore, he insisted that proper road facilities must at least be ensured.

He emphasized that lorries should be driven at reduced speeds so that school-going children are not affected. He further pointed out that the lorries transporting stones often carry loads beyond the permitted limits, resulting in stones falling onto the roads and causing inconvenience and danger. Hence, he insisted that stones must be transported strictly within the prescribed load limits.

He also expressed concern that wastewater from the quarry should not be discharged into lakes, as it could contaminate drinking water sources. Necessary treatment arrangements must therefore be made before discharge. Finally, he stated that the quarry must henceforth operate strictly in accordance with the

stipulated Rules and Regulations.

9. Tmt. Sundari, Pallimettu Street, Palli Village:

Tmt. Sundari stated that due to blasting, all their wells are collapsing, and residents are unable to sleep peacefully at night.

10. Thiru Parasuraman, Ramandhangal Village:

Thiru Parasuraman stated that the establishment of quarries is affecting all the residents of the village, and cracks have appeared in both new and old houses. He conveyed that it is the opinion of the villagers that no permission should be granted for any new quarries.

He further mentioned that even after digging deep borewells, water is not available, and there is not enough space for the safe rearing of goats and cattle. Therefore, he stated that the existing quarries are sufficient and that any new quarries are unnecessary for the people.

11. Tmt. Selvi, Pallimettu Street, Palli Village:

Tmt. Selvi stated that the presence of crusher units is causing significant hardship to them, as her house is located very close to a crusher. She mentioned that cracks have developed in all their houses, resulting in serious damage. Therefore, she stated that crushers are unnecessary for their Palli Village.

She further noted that the water consumed by children is currently contaminated with blasting chemicals, which is a cause for concern. However, she added that if the existing crushers are removed, the livelihood of the villagers would improve, as all the houses in the area are already in a damaged state. She concluded by stating that this is their request and strongly urged that no new crushers should be established in their village.

After that, No representation continued from the public for providing comments.

As no members of the public came forward to continue expressing their views, the District Revenue Officer, Tiruvannamalai, directed that the public hearing meeting be concluded, and accordingly, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, informed that the views expressed by the public had been duly recorded and that the written representations received would be forwarded to the State Environment Impact Assessment Authority (SEIAA), Tamil Nadu, and thereby declared that the public hearing meeting had concluded.

Furthermore, regarding the proposed Thiru. Gokulraj Rough Stone and Gravel Quarry Project, a total of 13 written petitions were received from the public, while no submissions were received via email. No petitions were received at the office of the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

District Environmental Engineer
Tamilnadu Pollution Control Board
Tiruvannamalai

District Revenue Officer
Tiruvannamalai

District Collector
Tiruvannamalai

உத்தேசிக்கப்பட்ட தி/ள். கோகுல்ராஜ், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி, புல எண்கள். 95/1, 95/2, 95/3, 95/4, 95/5, 95/6, 95/7, 95/8, 95/9 & 95/10, பல்லி கிராமம், செய்யாறு வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் 3.45.0 ஹெக்டர் பரப்பளவில் குவாரி பணி நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 10.02.2026 அன்று எண். 192/2A3, சித்தாத்தூர் மெயின் ரோடு, சோழவரம் கிராமம், வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். ஜெய்த்ரி திருமண மண்டபத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:

பங்கேற்றோர்:

1	திரு. இரா. இராம்பிரதீபன்	:	மாவட்ட வருவாய் அலுவலர், திருவண்ணாமலை. (மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களின் பிரதிநிதி)
2	திரு. அ. ஜோதி பிரகாஷ்	:	மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை.
3	முனைவர். சி. சுகாஷினி	:	உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை.
4	திரு. க. பிரேம் குமார்	:	உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை.
5	திரு. ந. அசோக்குமார்	:	வட்டாட்சியர், செய்யாறு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்.
6	திரு.கோகுல்ராஜ்	:	உரிமையாளர் தி/ள். கோகுல்ராஜ், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி.
7	திரு. பாலசுப்ரமணி	:	ஆலோசகர் தி/ள்.குளோபல் மைனிங் சொல்யூசன்ஸ், சேலம்.
8	பொதுமக்கள்	:	106 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது)

திரு. கோகுல்ராஜ், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட வருவாய் அலுவலர், திருவண்ணாமலை, பொதுமக்கள் மற்றும் திரு. கோகுல்ராஜ், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினமலர் மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 08.01.2026 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், பல்லி கிராம சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரியின் உரிமையாளர் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை தெரிவிக்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் – தமிழ்நாடுக்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்து, திரு. கோகுல்ராஜ், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி உரிமையாளர் உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பான விளக்கவுரையை வழங்க அழைத்தார்.

தி/ள். கோகுல்ராஜ், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. பாலசுப்ரமணி, தி/ள்.குளோபல் மைனிங் சொல்யூசன்ஸ், சேலம் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, கீழ்க்கண்ட பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

1. **திருமதி. உத்திரகுமாரி, பல்லி கிராமம்:**

திருமதி. உத்திரகுமாரி அவர்கள், கல்குவாரி அமைக்க இருப்பதாக நீங்கள் தெரிவித்துள்ளீர்கள். கல் குவாரிகளில் வெடிபொருட்கள் பயன்படுத்தி வெடி வெடிக்கும்போது நில அதிர்வு ஏற்பட்டு வீடுகளின் சுவர்களில் விரிசல்கள் தோன்றுகின்றன; இது எங்கள் சந்ததியினரின் பாதுகாப்பை பாதிக்கும் என்பதால் கவலை தெரிவித்தார். இதுகுறித்து நீங்கள் என்ன சொல்கீறர்கள் என்று வினவினார்? இதற்கு பதிலாக மாவட்ட வருவாய் அலுவலர், திருவண்ணாமலை அவர்கள் இத்திட்டம் குறித்த விளக்கவுரை காணொளி காட்சி வாயிலாக தங்களுக்கு விளக்கப்பட்டது. இத்திட்டம்குறித்த கருத்துக்களை எழுத்துவாயிலாக,

வாழ்மொழிவாயிலாகவோ பதிவிடலாம் என்றும், நீங்கள் பதிவிட்ட கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு அனுப்பபடும். மேலும், இத்திட்டம் குறித்த கருத்துக்களை பதிவிடுமாறு கேட்டுக்கொண்டார்.

தாங்கள் முன்வைக்கும் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அரசு விதிமுறைகள் முறையாகப் பின்பற்றப்பட்டால் குவாரி செயல்படுவதற்கு எனது ஆதரவை தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

2. திரு.சுப்புராமய்யா, NGO:

திரு. சுப்புராமய்யா அவர்கள், குவாரிகள் அனைத்து இடங்களிலும் அமைக்கப்படுவதில்லை; குறிப்பிட்ட சில இடங்களிலேயே அமைக்கப்படுகின்றன. ஆகையால், நம் பல்லி கிராமத்தில் இந்த குவாரி அமைவது ஒரு வரமாகும் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். மேலும், கிராமத்தில் விவசாயம் மற்றும் நீர்வளத்துக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்றும் கூறினார். இதுகுறித்து பத்து என்.ஜி.ஓ.க்கள் இணைந்து கடிதம் வழங்கியுள்ளோம் என்றும் தெரிவித்தார். இதனால், உத்தேசிக்கப்பட்ட இக்குவாரிக்கு எனது ஆதரவை தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

3. திரு.சுரேஷ், தன்னார்வலர்:

திரு. சுரேஷ் அவர்கள், பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் தனது காலை வணக்கத்தை தெரிவித்தார். இக்குவாரி அமைந்ததன் மூலம், படித்த மற்றும் படிக்காத உள்ளூர் கிராம இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது என்று கூறினார். மேலும், மரக்கன்றுகள் நட்டு, காற்று மாசு ஏற்படாதவாறு மாசுக்கட்டுப்பாடு வாரியம் மூலம் உரிய கண்காணிப்பு செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். எனவே,

இக்குவாரிக்கு எந்தத் தடையும் இன்றி அனுமதி வழங்கப்பட வேண்டும் என தனது ஆதரவை தெரிவித்தார்.

4. திருமதி. தில்லை நாயகி, பல்லிமேட்டுத்தெரு, பல்லி கிராமம்:

திருமதி. தில்லை நாயகி அவர்கள், தாங்கள் தற்போது கிரஷர் அமைக்க இருப்பதாக தெரிவித்துள்ளீர்கள். இதற்கு முன்பு அமைக்கப்பட்ட கிரஷர்களால் எங்களது வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார். தனக்கு வயது முதிர்ந்திருந்தாலும், எங்களது குழந்தைகள் பாதுகாப்பாக வாழ வேண்டும் என்பதால், கிரஷர் செயல்பாட்டில் முறையான பாதுகாப்பு நடவடிக்கைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

5. திரு. S. ஜெகதீஷ், பல்லிமேட்டு நகர், பல்லி கிராமம்:

திரு. S. ஜெகதீஷ் அவர்கள், இதற்கு முன்பு பேசிய திரு. சுப்புராமய்யா அவர்கள், குவாரி அமைவது தங்கள் கிராமத்திற்கு கிடைத்த வரம் என்று கூறியதாக தெரிவித்தார். இது எப்படி வரமாகும் என்று வினவினார்? மேலும், குவாரி தொடர்பான தகவல்கள் நிழற்படங்களின் மூலம் விரிவாக விளக்கப்பட்டதாக கூறப்பட்டாலும், இக்கூட்டத்தில் அமர்ந்திருக்கும் பலருக்கு நாம் ஏன் இங்கு கூடியுள்ளோம் என்பதே தெளிவாக தெரியவில்லை என்று கருத்து தெரிவித்தார். இக்குவாரி அமைக்கப்படக்கூடாது; குறிப்பாக இது பல்லி மேட்டு நகரில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதால் எதிர்ப்பு தெரிவித்தார். பல்லி மேட்டு தெரு அருகில் 50 பேருக்கு மேல் இக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள நிலையில், கிராமத்தில் மொத்தம் 900 பேர் வசித்து வருகிறார்கள் என்றும் குறிப்பிட்டார். ஆகையால், இந்தக் கூட்டம் எங்கள் கிராமத்திலேயே நடத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட அனைவருக்கும் கருத்து தெரிவிக்கும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும், எங்கள் ஊரில் அடிப்படை வசதிகள் இல்லை; அவற்றை முதலில் செய்து தர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். ஊருக்காக நிறைய

விஷயங்கள் தேவைப்படுகிறது என்றார். ஊருக்குள் இந்த கூட்டத்தை நடத்தவேண்டும் என்றும், ஊரில் 1000 பேர் உள்ளனர் இங்கு எழுபது பேர் தான் வந்துள்ளனர் என்றும் எனக்காக பேசவில்லை என் ஊருக்காக பேசுகிறேன் என்றும் கூறினார். எனவே, கூட்டத்தை கிராமத்திலேயே நடத்தி, மக்களை திரட்டி, எங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தரட்டும் பிறகு முடிவு செய்கிறோம் என்றும் ஊர்பொதுமக்களுக்காக வைக்கப்படும் கோரிக்கை என்றும் தெரிவித்தார்.

6. திரு.மதுசூதனன், பல்லி மேட்டுத்தெரு, பல்லி கிராமம்:

திரு. மதுசூதனன் அவர்கள், இக்கருத்துக்கேட்பு கூட்டத்தை எங்கள் ஊரிலேயே நடத்த ஏற்பாடு செய்ததற்கு நன்றியை தெரிவித்தார். பொதுவாக எந்தக் கல்குவாரி தொடர்பான கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தப்பட்டாலும், அந்தப் பஞ்சாயத்து உட்பட்ட மக்களைவிட பிற பஞ்சாயத்து மக்களே அதிகமாக கலந்து கொள்வது வழக்கமாக உள்ளது. ஆனால் இக்கல்குவாரி தொடர்பான பொதுக்கூட்டத்தில் எங்கள் பஞ்சாயத்து சார்ந்த மக்கள் அதிக அளவில் கலந்து கொண்டிருப்பது மகிழ்ச்சியளிப்பதாக அவர் குறிப்பிட்டார். பஞ்சமி நிலத்தில் கல்குவாரி அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார். மீண்டும் மீண்டும் பஞ்சமி நிலம் குறித்த கருத்துக்களை பதிவிட்டமையால், இத்திட்டம்சார்ந்த கருத்துக்ளை தெரிவிக்காததால், மாவட்ட வருவாய் அலுவலர், திருவண்ணாமலை அவர்கள் இத்திட்டம் குறித்த கருத்துக்களை மட்டும் பதிவிடுமாறு கேட்டுக்கொண்டார்.

இதனைதொடர்ந்து அவர் பேசுகையில் கிராமத்தில் வசிக்கும் மக்களின் முக்கிய வாழ்வாதாரம் ஆடு, மாடு வளர்ப்பு தொழில் ஆகும். ஆனால், குவாரி அமைக்கும் நிறுவனங்கள் நிலங்களை அதிக விலையில் வாங்கி வருகின்றன என்றும் தெரிவித்தார். குவாரி அமைக்க திட்டமிடப்பட்டுள்ள பகுதியைச் சுற்றிய 500 மீட்டர் பரப்பளவில் வசிக்கும் மக்கள் பெரும்பாலும் பட்டியலின சமூகத்தைச்

சேர்ந்தவர்கள் என்றும் குறிப்பிட்டார். சில கார்பரேட் நிறுவனங்கள் உயர்ந்த விலைக்கு நிலங்களை வாங்கி, கல் எடுக்கும் அனுமதியையும் பெற்று அதிக அளவில் கற்களை வெட்டி எடுத்தும் வருகின்றன. ஏற்கனவே 500 மீட்டர் சுற்றளவில் நான்கு அல்லது ஐந்து கல்குவாரிகள் செயல்பட்டு வருகின்றன என்றும் கூறினார். இது அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தும் எனவும் அப்பகுதி மக்கள் ஆடு, மாடுகளை எவ்வாறு மேய்ப்பர் எனவும் வினவினார்? இது அப்பகுதி விவசாயத்தை அழிக்கும் செயலாகும் என்று தெரிவித்தார். அரசு அலுவலர்கள் பஞ்சமி நிலங்களில் கல்குவாரி அமைக்க அனுமதி வழங்குவது குறித்து கவலை வெளியிட்ட அவர், இக்கல்குவாரி அமைப்பதற்கு தனது ஆட்சேபனையை தெரிவித்தார்.

7. திரு. முனியாண்டி, பல்லி மேட்டுத்தெரு, பல்லி கிராமம்:

திரு. முனியாண்டி அவர்கள், இதற்கு முன்பு பேசியவர்களைப் போல, கிரஷர்கள் இந்த கிராமத்தில் ஏற்கனவே அமைத்துவிட்டனர்; நாம் போராடினாலும் எதையும் மாற்ற முடியாத நிலை உள்ளது என்று தெரிவித்தார். கிரஷர்களில் இருந்து எழும் மிகுந்த சத்தம் காரணமாக இரவில் நிம்மதியாக உறங்க முடியவில்லை என்றும் கூறினார். எனவே, நிர்ணயிக்கப்பட்ட நேரங்களில் மட்டுமே பாறைகள் வெடிப்பதும், கிரஷர் செயல்பாடுகளும் நடைபெற வேண்டும் என்று வலியுறுத்தினார். மாலை ஆறு மணிக்குப் பிறகும் கிரஷர்களை இயக்குகின்றனர் என்பதால் அதற்கு கட்டுப்பாடு விதிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். இரவு நேரங்களில் லாரிகளின் சத்தம் அதிக அளவில் உள்ளது. இதனால், இத்தகைய கிரஷர் செயல்பாடுகள் கிராமத்திற்கு தேவையில்லை என தெரிவித்தார்.

8. திரு.கர்ணன், பல்லி மேட்டுத்தெரு, பல்லி கிராமம்:

திரு.கர்ணன் அவர்கள், எங்கள் கிராமத்தில் அமைந்துள்ள கல்குவாரிகள் அனைத்தும் அளவில்லாமல் பாறைகளை வெட்டி எடுக்கின்றன என்று கூறினார்.

"குவாரி வேண்டாம்" என்று கூறினாலும் நிறுத்தப்பபோவதில்லை என்பதால், சாலை வசதிகளை உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார். பள்ளிக்கு செல்லும் குழந்தைகள் பாதிக்கப்படாதவாறு லாரிகள் வேகத்தை குறைத்து இயக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். மேலும், கற்களை ஏற்றிச்செல்லும் லாரிகள் நிர்ணயிக்கப்பட்ட அளவுகளைவிட அதிகமாக ஏற்றிச் செல்வதால் கற்கள் சாலைகளில் விழுந்து பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, லாரிகளில் நிர்ணயிக்கப்பட்ட அளவுகளில் மட்டும் கற்களை ஏற்றிச்செல்ல வேண்டும். குவாரியின் கழிவு நீர் ஏரிகளில் கலக்கப்பட்டு குடிநீர் தரத்தை பாதிக்கக்கூடாது என்பதால், அதை சுத்திகரிக்கும் ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்றும் கூறினார். இனி, குவாரியை முறையாக நிர்ணயப்பட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப செயல்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

9. திருமதி. சுந்தரி, பல்லி மேட்டுத்தெரு, பல்லி கிராமம்:

திருமதி. சுந்தரி அவர்கள், வெடி வைப்பதால் எங்கள் கிணறுகள் அனைத்தும் இடிந்து விழுகின்றன என்றும், இரவு பகலும் தூக்கம் கெடுகின்றது என்றும் தெரிவித்தார்.

10. திரு. பரசுராமன், இராமந்தாங்கல் கிராமம்:

திரு. பரசுராமன் அவர்கள், கல்குவாரி அமைவதால் ஊர் மக்கள் அனைவரும் பாதிக்கப்படுகின்றனர் என்றும், புதியதோ பழையதோ அனைத்து வீடுகளிலும் விரிசல்கள் தோன்றுகின்றன என்றும் தெரிவித்தார். புதிதாக அமையும் குவாரிகளுக்கு எந்தவித அனுமதியும் வழங்கக் கூடாது என்பது மக்களின் கருத்து என்றும் கூறினார். ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தாலும் தண்ணீர் வருவதில்லை என்றும், ஆடு மற்றும் மாடுகள் கூட பாதுகாப்பாக இருக்க இடமில்லை என்பதால், தற்போது உள்ள குவாரிகளே போதுமானவை என

குறிப்பிட்டார். புதிதாக வரும் குவாரிகள் மக்களுக்கு அவசியமற்றவை என தெரிவித்தார்.

11. திருமதி. செல்வி, பல்லி மேட்டுத்தெரு, பல்லி கிராமம்:

திருமதி. செல்வி அவர்கள், கிரஷர்கள் அமைந்துள்ளதால் எங்களுக்கு அதிக பாதிப்பு ஏற்படுகின்றது என்றும், எங்களின் வீடு கிரஷருக்கு அருகே அமைந்துள்ளது என்றும் தெரிவித்தார். எங்களின் வீடுகள் அனைத்தும் விரிசல்கள் உருவாகி பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, எங்கள் பல்லி கிராமத்திற்கு கிரஷர்கள் தேவையற்றவை என்று கூறினார். தற்போது குழந்தைகள் பருகும் நீரில் வெடி மருந்துகள் கலந்துள்ளதும் கவலை அளிக்கின்றது. இருப்பினும், இருக்கிற கிரஷர்களை காலி செய்தால் எங்களின் வாழ்வாதாரம் மேம்படும் என்றும், அப்பகுதியில் உள்ள அனைத்து வீடுகளும் இடிந்த நிலையில் உள்ளது எனவும் குறிப்பிட்டார். இதுவே எங்களின் கோரிக்கை என்பதால், எங்கள் கிராமத்தில் புதிய கிரஷர்கள் அமைக்க வேண்டாம் என தெரிவித்தார்.

அதன் பின்னர், பொதுமக்கள் தரப்பில் இருந்து கருத்து தெரிவிக்க யாரும் முன்வரவில்லை.

பொது மக்கள் தொடர்ந்து கருத்துக்களை தெரிவிக்க முன் வராததால் மாவட்ட வருவாய் அலுவலர், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தினை நிறைவுசெய்திட கூறியதனை தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் – தமிழ்நாடுக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. கோகுல்ராஜ், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாக 13 மனுக்கள் பெறப்பட்டுள்ளது, மின்னஞ்சல் மூலமாக எதுவும் பெறப்படவில்லை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை, அலுவலகத்திற்கு மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை,.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
திருவண்ணாமலை

மாவட்ட வருவாய் அலுவலர்
திருவண்ணாமலை

மாவட்ட ஆட்சித்தலைவர்
திருவண்ணாமலை